சார்பு நீதிமன்றம், சிவகங்கை

முன்னிலை. R. பாண்டி, பிஎஸ்.ஸி.,பிஎல்.,

சார்பு நீதிபதி, சிவகங்கை

2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 12-ம் நாள் வியாழக்கிழமை

அசல் வழக்கு எண்.540/2019

**CNR No.TNSV030009732019**

---

1) முத்துராமலிங்கம்

2) சோனைமுத்து

3) வெள்ளைச்சாமி

4) கணேசன்

5) நாகு

6) ரவி

7) ராஜேந்திரன்

8) ஷாஜஹான் ......வாதிகள்

..எதிர்..

1) வளர்மதி

2) பாண்டி

3) செல்லப்பாண்டி ......பிரதிவாதிகள்

இவ்வழக்கானது 19.10.2019-ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 17.02.2026-ம் தேதியன்று என் முன்னிலையில் இறுதி விசாரணைக்காக வந்த போது வாதிகளுக்காக கற்றறிந்த வழக்குரைஞர் திரு.T.முத்துராமன் அவர்கள் ஆஜராகியும், 1, 2 பிரதிவாதிகளுக்காக கற்றறிந்த வழக்குரைஞர் திரு.M.களஞ்சியராஜா அவர்கள் ஆஜராகியும், 3ம் பிரதிவாதியை நீதிமன்றத்தில் அழைத்தும் அவர் ஆஜரில்லாததால் அவரை ஒருதலைபட்சமாக தீர்மானித்தும், இருதரப்பு வழக்குரைஞர்களின் வாதுரைகளைக் கேட்டும், இவ்வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களை ஆய்வு செய்தும் இதுநாள் வரையில் இவ்வழக்கு இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

**தீர்ப்புரை**

1) தாவா 1-வது லக்க சொத்து 1-ம் வாதிக்கு பாத்தியமானது என விளம்புகை செய்தும், அதன் தொடர்ச்சியாக தாவா 1-வது லக்க சொத்தை 1-ம் வாதி அனுபவிப்பதை பிரதிவாதிகளோ, அவரை சார்ந்தவர்களோ தடை செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கியும்,

2) தாவா 2-வது லக்க சொத்து 2-ம் வாதிக்கு பாத்தியமானது என விளம்புகை செய்தும், அதன் தொடர்ச்சியாக தாவா 2-வது லக்க சொத்தை 2-ம் வாதி அனுபவிப்பதை பிரதிவாதிகளோ, அவரை சார்ந்தவர்களோ தடை செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கியும்,

3) தாவா 3-வது லக்க சொத்து 3-ம் வாதிக்கு பாத்தியமானது என விளம்புகை செய்தும், அதன் தொடர்ச்சியாக தாவா 3-வது லக்க சொத்தை 3-ம் வாதி அனுபவிப்பதை பிரதிவாதிகளோ, அவரை சார்ந்தவர்களோ தடை செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கியும்,

4) தாவா 4-வது லக்க சொத்து 4-ம் வாதிக்கு பாத்தியமானது என விளம்புகை செய்தும், அதன் தொடர்ச்சியாக தாவா 4-வது லக்க சொத்தை 4-ம் வாதி அனுபவிப்பதை பிரதிவாதிகளோ, அவரை சார்ந்தவர்களோ தடை செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கியும்,

5) தாவா 5-வது லக்க சொத்து 5-ம் வாதிக்கு பாத்தியமானது என விளம்புகை செய்தும், அதன் தொடர்ச்சியாக தாவா 5-வது லக்க சொத்தை 5-ம் வாதி அனுபவிப்பதை பிரதிவாதிகளோ, அவரை சார்ந்தவர்களோ தடை செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கியும்,

6) தாவா 6-வது லக்க சொத்து 6-ம் வாதிக்கு பாத்தியமானது என விளம்புகை செய்தும், அதன் தொடர்ச்சியாக தாவா 6-வது லக்க சொத்தை 6-ம் வாதி அனுபவிப்பதை பிரதிவாதிகளோ, அவரை சார்ந்தவர்களோ தடை செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கியும்,

7) தாவா 7-வது லக்க சொத்து 7-ம் வாதிக்கு பாத்தியமானது என விளம்புகை செய்தும், அதன் தொடர்ச்சியாக தாவா 7-வது லக்க சொத்தை 7-ம் வாதி அனுபவிப்பதை பிரதிவாதிகளோ, அவரை சார்ந்தவர்களோ தடை செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கியும்,

8) தாவா 8-வது லக்க சொத்து 8-ம் வாதிக்கு பாத்தியமானது என விளம்புகை செய்தும், அதன் தொடர்ச்சியாக தாவா 8-வது லக்க சொத்தை 8-ம் வாதி அனுபவிப்பதை பிரதிவாதிகளோ, அவரை சார்ந்தவர்களோ தடை செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கியும்,

9) 1ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட 08.12.2010-ம் தேதி இனாம் ஆவணம் செல்லத்தக்கதல்ல என விளம்புகை பரிகாரம் வழங்கியும்,

10) 1ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்டுள்ள 31.05.2011-ம் தேதி சீர்திருத்த பத்திரம் செல்லத்தக்கதல்ல என விளம்புகை பரிகாரம் வழங்கியும்,

11) 2, 3 பிரதிவாதிகள் பெயரில் ஏற்பட்டுள்ள 20.09.2017-ம் தேதிய கிரைய ஆவணம் செல்லத்தக்கதல்ல என விளம்புகை பரிகாரம் வழங்கியும் மற்றும் செலவுத் தொகை கோரியும் வாதிகளால் இந்த அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 2) <u>வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம் :</u>

தாவா சொத்துக்களின் ஆதி சர்வே எண்.280/3 ஆகும். இதன் மொத்த விஸ்தீரணம் 3 ஏக்கர் 20 செண்டு ஆகும். மேற்படி சொத்தும் மறவமங்களம் கிராமத்தைச் சேர்ந்த ஆண்டியப்பன் மகன் காளிமுத்துக்கு 28.03.1974-ம் தேதிய பத்திரப்படி சுயார்ஜித கிரைய பாத்தியமானதாகும். மேற்படி சர்வே எண்ணில் தென்புறம் ஏக்கர் 2 செண்டு 9ல் 5 செண்டு இடத்தை 1ம் வாதிக்கு மேற்படி காளிமுத்து 23.01.1979-ம் தேதி சரியான பிரதிபிரயோஜனத்திற்கு கிரையம் கொடுத்துள்ளார். மேற்படி சொத்தும் தாவா 1வது லக்கமாகும். அதேபோல் மேற்படி சர்வே எண்ணில் 5 செண்டு இடத்தை 22.01.1979-ம் தேதி 2-ம் வாதிக்கு சரியான பிரதிபிரயோஜனத்திற்கு கிரையம் கொடுத்துள்ளார். மேற்படி சொத்தும் தாவா 2-வது லக்கம் ஆகும். தாவா 3-வது லக்க சொத்தையும் மேற்படி காளிமுத்து சரியான பிரதிபிரயோஜனத்திற்கு 16.01.1979-ம் தேதி 3-ம் வாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார். தாவா 4-வது லக்கத்தையும் மேற்படி காளிமுத்து சரியான பிரயோஜனத்திற்கு 4ம் வாதியின் தகப்பனார் கருப்பையா பிள்ளைக்கு 16.01.1979-ம் தேதி கிரையம் கொடுத்துள்ளார். மேற்படியார் இறந்த பிறகு மேற்படி சொத்தை 4-ம் வாதி வாரிசு கிரமத்தில் பாத்தியமடைந்து அனுபவம் செய்து வருகின்றார். தாவா 5வது லக்கத்தையும் மேற்படி காளிமுத்து 5-ம் வாதியின் தகப்பனார் ஆறுமுகத்திற்கு 16.01.1979-ம் தேதி சரியான பிரதிபிரயோஜனத்திற்கு கிரையம் கொடுத்துள்ளார். மேற்படி ஆறுமுகம் இறந்த பிறகு அவரது மகனான 5ம்

வாதி வாரிசு கிரமத்தில் மேற்படி சொத்தை பாத்தியப்படுத்தி அனுபவம் செய்து வருகின்றார். தாவா 6-வது லக்க சொத்தையும் மேற்படி காளிமுத்து 6-ம் வாதியின் தகப்பனார் தங்கத்துக்கு 29.01.1979-ம் தேதி கிரையப்பத்திரப்படி சரியான பிரதி பிரயோஜனத்திற்கு கிரையம் கொடுத்துள்ளார். மேற்படி தங்கம் இறந்த பிறகு மேற்படி சொத்தையும் அவரது வாரிசான 6-ம் வாதியும் வாரிசு கிரமத்தில் பாத்தியமடைந்து அனுபவம் செய்து வருகின்றார். தாவா 7-வது லக்கத்தையும் மேற்படி காளிமுத்து 7-ம் வாதியின் தாயார் பழனியம்மாளுக்கு 17.01.1979-ம் தேதி கிரையப்பத்திரப்படி சரியான பிரதிபிரயோஜனத்திற்கு கிரையம் கொடுத்துள்ளார். மேற்படி பழனியம்மாளும் மேற்படி சொத்தையும் அவரது மகனான 7-ம் வாதிக்கு 05.02.2016ம் தேதி செட்டில்மெண்டு பத்திரம் மூலம் பாத்தியப்படுத்தி கொடுத்து அதனை 7-ம் வாதியும் ஏற்று அனுபவம் செய்து வருகின்றார். தாவா 8-வது லக்க சொத்தை மேற்படி காளிமுத்து 8-ம் வாதிக்கு 16.01.1979-ம் தேதி சரியான பிரதிபிரயோஜனத்திற்கு கிரையம் கொடுத்து, மேற்படி சொத்தும் 8-ம் பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ளது. இதேபோல் மேற்படி சர்வே எண்ணில் 5 செண்டு இடத்தை மேற்படி காளிமுத்து அவரது மனைவியான திருவாயிக்கு 17.01.1979-ம் தேதி இனாம் செட்டில்மெண்டு மூலம் பாத்தியப்படுத்தி கொடுத்துள்ளார். இதேபோல் பல நபர்களுக்கு மேற்படி சர்வே எண்ணில் வாதிகளுக்கு கிரையம் கொடுத்த இடம் போக மீத இடங்களை பல தேதிகளில் கிரையம் கொடுத்துள்ளார். மேற்படி காளிமுத்துவிடம் கிரையம் பெற்ற வாதிகளும் தாவா சொத்துக்களை அவரவர் தனிப்பட்ட பாத்தியத்தில் வைத்து தொடர்ந்து அனுபவம் செய்து வருகின்றார்கள்.

இந்நிலையில் தாவா சர்வே எண்ணில் 5 செண்டு இடம் இனாம் செட்டில்மெண்டு ஆவணம் மூலம் பாத்தியப்பட்ட காளிமுத்து மனைவி திருவாயியும், தாவா சர்வே எண், பட்டாவும் அவரது கணவர் பெயரில் இருந்ததை advantage ஆக எடுத்துக்கொண்டு அவரது மகளான 1ம் பிரதிவாதிக்கு 08.12.2010-ம் தேதி 1 ஏக்கர் 79 செண்டை இனாம் செட்டில்மெண்டு பத்திரம் எழுதி கொடுத்துள்ளார். பின்பு 31.05.2011-ம் தேதி 1-ம் பிரதிவாதிக்கு சீர்திருத்த பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார். தாவா சர்வே எண்ணில் 5 செண்டு பாத்தியமுள்ள 1ம் பிரதிவாதியின் தாயார் எழுதிக் கொடுத்த sham and nominal ஆன இனாம் சாசனத்தை வைத்துக்கொண்டு 1ம்

பிரதிவாதியும், 2, 3 பிரதிவாதிகளுக்கு தாவா சர்வே எண்ணில் 1 ஏக்கர் 69 செண்டை 2, 3 பிரதிவாதிகளுக்கு 20.09.2017-ம் தேதி sham and nominal ஆக கிரையப்பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார். மேற்படி ஆவணங்கள் ஏற்பட்ட விவரமும் வாதிகளுக்கு 10.07.2017-ம் தேதி தான் தெரியவந்தது. உடனடியாக வாதிகளும் 18.07.2017-ம் தேதி காளையார்கோவில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தனர். மேற்படி புகாரின் பெயரில் விசாரணை ஒழுங்காக காளையார்கோவில் காவல் நிலையத்தில் எடுக்காததால், 1ம் வாதியும் மீண்டும் மாவட்ட குற்றப்பிரிவில் மனுக்கொடுத்து, மேற்படி மனுவும் காளையார்கோவில் காவல் நிலையத்திற்கு அனுப்பப்பட்டு, காளையார்கோவில் காவல்நிலையத்தில் பிரதிவாதிகள் மீது குற்ற எண்.264/18-ல் இதச பிரிவுகள் 420, 447, 427-ன் படி வழக்கு பதிவு செய்து மேற்படி வழக்கும் நிலுவையில் உள்ளது.

2, 3 பிரதிவாதிகளும் அவர்கள் பெயரில் ஏற்பட்டுள்ள கிரைய ஆவணத்தை வைத்துக்கொண்டு வாதிகளின் அனுபவத்தை தடை செய்யப்போவதாக கடந்த 01.09.2019-ம் தேதி முதல் தாவா கிராமத்தில் பிரஸ்தாபித்து வருகின்றார்கள். அவ்வாறு செய்தால் வாதிகளுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பும், கஷ்டமும் ஏற்பட வாய்ப்புள்ளது. பிரதிவாதிகளும் சட்டத்தை மதிக்காமல் எதையும் துணிந்து செய்யக்கூடியவர்கள். எனவே தாவா சொத்துக்கள் வாதிகளுக்கு பாத்தியமானது என விளம்புகை பரிகாரமும், வாதிகள் தாவா சொத்துக்களை அனுபவிப்பதை பிரதிவாதிகள் தடை செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் பிரதிவாதிகள் பெயரில் ஏற்பட்டுள்ள 08.12.2010, 31.05.2011, 20.09.2017-ம் தேதிய ஆவணங்கள் செல்லத்தக்கதல்ல என விளம்புகை பரிகாரம் கோரியும் தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3) 1-ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர் வழக்குரையின் சுருக்கம்- இதனை 2ம் பிரதிவாதி ஏற்றுக்கொள்கிறார்.</u>**

பாரா 4ல் கூறியுள்ள தாவா சொத்தானது 1ம் வாதியின் தந்தை காளிமுத்தன் த.பெ.ஆண்டியப்பன் என்பவருக்கு 28.03.1974-ம் ஆண்டு கிரையப்பாத்தியமான சொத்தாகும் என்றும், அதன் விஸ்தீரணம் 3.20 ஏக்கர் என்பதும் 1ம் பிரதிவாதியால்

ஒப்புக்கொள்ளப்படுகிறது. 1979-ம் வருடம் 1வது மாதத்தில் 36 நபர்களுக்கு 1ம் பிரதிவாதியின் தந்தை கிரையம் செய்து கொடுத்ததாகவும், அந்த தேதிகளிலேயே 1ம் பிரதிவாதியின் தாயாருக்கும் 5 செண்ட் இடத்தை கிரையம் எழுதிக் கொடுத்ததாகவும், வாதிகளும் அதில் கிரையம் பெற்றதாக தாவா வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். இப்படி ஒரு கிரையப்பதிவு நடந்துள்ளதாக கூறப்படும் விபரம் 1ம் பிரதிவாதியின் தந்தைக்கு தெரியாமல், மோசடியாக நடந்தது. ஏனென்றால், 8வது வாதியாக இருப்பவர் பிரபல ஆவண எழுத்தர் ஆவார். அதனால் தான் இந்த மோசடி 1ம் பிரதிவாதியின் தந்தைக்கு தெரியாமல் நடந்தது. மேலும் 1ம் பிரதிவாதியின் தந்தை உயிரோடு இருக்கும் வரை 1ம் பிரதிவாதி தந்தை பெயரில் பட்டா இருந்து, அவரே தாவா சொத்தையும் அனுபவம் செய்து வந்தார். அவர் 2005-ம் ஆண்டு இறந்த பிறகு, 1ம் பிரதிவாதியின் தாயாருக்கு பட்டா மாறுதல் ஏற்பட்டு, அதன் பிறகு 1ம் பிரதிவாதியின் தாயார் 1ம் பிரதிவாதிக்கு கடந்த 08.12.2010-ம் தேதி இனாம் சாசனம் எழுதி கொடுத்துள்ளார். அதில் சிறு குறைகள் இருந்ததால், கடந்த 31.05.2011-ம் தேதி அதில் சீர்திருத்த பத்திரம் செய்து கொடுத்துள்ளார்கள். அதன் பிறகு 1ம் பிரதிவாதி பெயருக்கு பட்டா மாறுதல் ஏற்பட்டு, தாவா சொத்தை 1ம் பிரதிவாதியே நேரடியாக அனுபவம் செய்து வந்தார். பின்னர் 1ம் பிரதிவாதி கடந்த 20.09.2017-ம் தேதி 2, 3 பிரதிவாதிகளுக்கு கிரையம் எழுதி கொடுத்துவிட்டார். அதற்காக மேற்படி வாதிகள் 1, 2, 3 பிரதிவாதிகள் மீது நில மோசடி புகார் கொடுக்கப்பட்டு, அவர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது.

பின்னர் 1ம் பிரதிவாதியின் ஆவணங்களை பரிசீலனை செய்து, அந்த குற்ற வழக்கும் கைவிடப்பட்டது. இந்த குற்ற வழக்கு தொடர்ந்த பிறகு தான் தாவா இடத்தைப் பொறுத்து போலி கிரையப்பதிவு செய்த விவரங்களை மற்ற 28 நபர்களையும் தொடர்பு கொண்டு கேட்டபொழுது தாவா சொத்தை 1ம் பிரதிவாதியின் சித்தப்பா செங்கொடி என்ற ஆறுமுகம் தான் கிரைய பதிவு செய்து கொடுத்தார் என்றும், 1ம் பிரதிவாதியின் தந்தைக்கு தெரியாது என்றும் கூறிவிட்டு இந்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய 28 நபர்கள் வரவில்லை. 1ம் பிரதிவாதியின் தந்தை தாவா சொத்தை 1 முதல் 8 வரை உள்ள வாதிகளுக்கு தாவா சொத்தை கிரையம் செய்து கொடுக்கவில்லை. 1ம் பிரதிவாதி தாவா சொத்தை கடந்த 20.09.2017ம் தேதிவரை அவரது தனித்த அனுபவத்தில் அனுபவம் செய்து வந்துள்ளார். அதன்

பிறகு இன்று வரை 2, 3 பிரதிவாதிகள் தான் அனுபவம் செய்து வருகிறார்கள். மேலும் தாவா சொத்து தொடர்பாக வழக்கு தாக்கல் செய்துள்ள 1 முதல் 8 வரை உள்ள வாதிகளோ, அவர்களோடு கிரையம் வாங்கியதாக சொல்லப்படும் மேலும் 28 நபர்களோ தாவா இடத்திற்கு எந்த காலத்திலும் உரிமை கொண்டாடியதில்லை.

1-ம் பிரதிவாதியின் தந்தை காளிமுத்தன் த.பெ. ஆண்டியப்பன் என்பவர் கடந்த 22.07.1984-ம் வருடம் மலைக்கண்ணு மகன் ராமலிங்கம் என்பவருக்கு, அவருடைய வேறொரு இடத்தை காளையார்கோவில் சார்பதிவு அலுவலகத்தில் கிரையப்பதிவு செய்து கொடுத்துள்ளார். அதன் ஆவண எண்.834/1984 ஆகும். அதிலுள்ள 1ம் பிரதிவாதியின் தந்தையின் கையெழுத்து மற்றும் விரல்ரேகையை ஆய்வுக்கு உட்படுத்தி ஒப்பீடு செய்து பார்த்தால், மேற்படி வாதிகளும் மற்ற 28 நபர்களும் 1ம் பிரதிவாதியின் தந்தையின் கையெழுத்தை போர்ஜரியாக போட்டு நில மோசடியில் ஈடுபட்டது தெரியவரும். அதை ஏற்றுக் கொள்ள 1ம் பிரதிவாதியும் தயாராக உள்ளார். வாதிகளுக்கு யாதொரு வழக்குமூலமும் இல்லை. கூறியிருக்கும் வழக்குமூலமும் சுத்தப்பொய். தாவா சொத்தைப்பொறுத்து வாதிகள் கோரியுள்ள பரிகாரங்கள் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியதில்லை. வாதிகள் தாக்கல் செய்துள்ள தாவா பிராதை 1ம் பிரதிவாதி தரப்பு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

**4)** வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரை மற்றும் எதிர்வழக்குரை ஆகியவற்றின் அடிப்படையில் இந்நீதிமன்றம் கீழ்கண்ட எழுவினாக்களை 02.04.2025-ம் தேதி வனைந்துள்ளது.

**Issues:**

1) Whether the 1st plaintiff entitled to the Declaration relief in respect of 1st Item of the suit property and consequential relief of permanent Injunction in respect 1st Item as prayed for?

2) Whether the 2nd plaintiff entitled to the Declaration relief in respect of 2nd item of the suit property and consequential relief of permanent Injunction in respect 2nd Item as prayed for?

3) Whether the 3rd plaintiff entitled to the Declaration relief in respect of 3rd Item of the suit property and consequential relief of permanent Injunction in respect 3rd Item as prayed for?

4) Whether the 4th plaintiff entitled to the Declaration relief in respect of 4th Item of the suit property and consequential relief of permanent Injunction in respect 4th Item as prayed for?

5) Whether the 5th plaintiff entitled to the Declaration relief in respect of 5th Item of the suit property and consequential relief of permanent Injunction in respect 5th Item as prayed for?

6) Whether the 6th plaintiff entitled to the Declaration relief in respect of 6th Item of the suit property and consequential relief of permanent Injunction in respect 6th Item as prayed for?

7) Whether the 7th plaintiff entitled to the Declaration relief in respect of 7th Item of the suit property and consequential relief of permanent Injunction in respect 7th Item as prayed for?

8) Whether the 8th plaintiff entitled to the Declaration relief in respect of 8th Item of the suit property and consequential relief of permanent Injunction in respect 8th Item as prayed for?

9) Whether the Plaintiff entitled the relief of Declaration on 08.12.2010 Settlement deed as void as prayed for?

10) Whether the plaintiff entitled the relied of Declaration on 31.05.2011 Rectification deed as void as prayed for?

11) Whether the plaintiff entitled the relief of Declaration on 20.09.2017 sale deed as void as prayed for?

12) To what other relief?

5) வாதிகள் தரப்பில் 4-ம் வாதி வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.12 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. 5-ம் வாதி வா.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. 1ம் வாதி வா.சா.3 ஆக விசாரணை செய்யப்பட்டு வா.சா.ஆ.14 முதல் வா.சா.ஆ.16 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. நாகராஜன் என்பவர் வா.சா.4 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. பிரதிவாதிகள் தரப்பில் சுப்பிரமணியன் த/பெ.பிச்சை என்பவர் பி.வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மணிகண்டன் என்பவர் பி.வா.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டு சா.சா.ஆ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது. 2ம் பிரதிவாதி பி.வா.சா.3 ஆக விசாரணை செய்யப்பட்டு பி.வா.சா.ஆ.3 மற்றும் பி.வா.சா.ஆ.4 குறியீடு செய்யப்பட்டுள்ளது. சுப்பிரமணியன் த/பெ.ஒய்யப்பன் என்பவர் பி.வா.சா.4 ஆக விசாரணை செய்யப்பட்டு சா.சா.ஆ.2 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6) இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது.

7) <u>எழுவினா-1-ற்கான தீர்வு-</u>

சர்வே எண்.280/3 சொத்தானது மொத்த விஸ்தீரணம் 3 ஏக்கர் 20 செண்டு என்றும், மேற்படி சொத்து ஆண்டியப்பன் மகன் காளிமுத்துக்கு 28.03.1974-ம் தேதிய பத்திரப்படி சுயார்ஜித கிரைய பாத்தியமானது என்றும் வாதிகள் குறிப்பிட்டுள்ள சங்கதியானது 1ம் பிரதிவாதி தனது எதிர்வழக்குரை சங்கதி மூலமாக ஒப்புக்கொண்டுள்ளார். 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை சங்கதியை 2ம் பிரதிவாதி ஏற்றுக்கொண்டதாக குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டு ஏற்கப்பட்டுள்ளது. மேற்படி சர்வே எண்ணில் தென்புறம் 2 ஏக்கர் 9 செண்டில் 5 செண்ட் இடத்தை 1ம் வாதிக்கு 23.01.1979-ம் தேதி மேற்படி காளிமுத்து கிரையம் செய்து கொடுத்ததாகவும் மேற்படி சொத்து 1வது லக்க சொத்து என்றும் மேற்படி சங்கதிக்கு ஆதரவாக வா.சா.ஆ.1 கிரைய பத்திர அசல் ஆவணம் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**8**) மேற்படி சங்கதியை ஆட்சேபித்து பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை சங்கதியில் 1ம் பிரதிவாதியின் தந்தை காளிமுத்து 1 முதல் 8 வாதிகளுக்கு தாவா சொத்தை கிரையம் செய்து கொடுக்கவில்லை என்றும், 1ம் பிரதிவாதியின் தந்தை உயிரோடு இருக்கும்வரை 1ம் பிரதிவாதி தந்தை பெயரில் பட்டா இருந்து, அவரே தாவா சொத்தை அனுபவம் செய்து வந்தார் என்றும் அவர் 2005-ம் ஆண்டு இறந்த பிறகு 1ம் பிரதிவாதியின் தாயாருக்கு பட்டா மாறுதல் ஏற்பட்டு அதன் பிறகு 1ம் பிரதிவாதியின் தாயார் 1ம் பிரதிவாதிக்கு கடந்த 08.12.2010-ம் தேதிய இனாம் சாசனம் எழுதி கொடுத்துள்ளார் என்றும், அதில் இருந்த குறையை சரிசெய்து 31.05.2011-ம் தேதி சீர்திருத்த பத்திரம் செய்து கொடுத்துள்ளார் என்றும் அதன் பிறகு 1ம் பிரதிவாதி பெயருக்கு பட்டா மாறுதல் ஏற்பட்டு, தாவா சொத்தை 1ம் பிரதிவாதி அனுபவம் செய்து பிறகு 20.09.2017-ம் தேதி 2, 3 பிரதிவாதிகளுக்கு கிரையம் எழுதி கொடுத்துவிட்டார் என்று எதிர்வழக்குரையில் சங்கதி தெரிவிக்கப் பட்டுள்ளது.

**9**) வாதிகள் தரப்பில் 08.12.2010-ம் தேதிய செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்று நகலை வா.சா.ஆ.10 ஆகவும், 31.05.2011-ம் தேதிய சீர்திருத்தப்பத்திரத்தின் சான்று நகல் வா.சா.ஆ.11 ஆகவும், 20.09.2017-ம் தேதிய கிரையப்பத்திரம் சான்று நகல் வா.சா.ஆ.12 ஆகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்சொன்ன வா.சா.ஆ10 ஆவணத்தின் சான்று நகல் பி.வா.சா.ஆ.1 ஆகவும், வா.சா.ஆ.12 ஆவணத்தின் சான்று நகல் பி.வா.சா.ஆ.4 ஆகவும் பிரதிவாதிகள் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**10**) மேற்சொன்ன வா.சா.ஆ10 ( பி.வா.சா.ஆ.1) வா.சா.ஆ.11 (பி.வா.சா.ஆ.4) மற்றும் வா.சா.ஆ.12 ஆகியவற்றை பரிசீலனை செய்கையில் சர்வே எண்.280/3A3A விஸ்தீரணம் 1 ஏக்கர் 69 சென்ட் இடமானது 1ம் பிரதிவாதிக்கு அவரது தாயார் திருவாயி செட்டில்மெண்ட் மூலமாக பாத்தியப்படுத்தி மேற்படி சொத்தினை 2, 3 பிரதிவாதிகளுக்கு 1ம் பிரதிவாதி வா.சா.ஆ.12 மூலமாக கிரையம் செய்துள்ளார் என்பதை அறிய முடிகிறது.

**11)** 1-ம் வாதி கிரையம் பெற்றதாக சொல்லும் தாவா 1வது லக்க சொத்தின் சர்வே எண். 280/3A3C -ல் 5 சென்ட் என பிராது சொத்து விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி 1வது லக்க சொத்து தான் வா.சா.ஆ.1 கிரையப்பத்திரத்தில் கண்ட சொத்தாகும் என்பதை ஒத்துரைத்து (Corelate) உறுதியூட்டக்கூடிய ஆவணம் எதுவும் வாதிகள் தாக்கல் செய்திடவில்லை. ஏனெனில் வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் "சர்வே எண் 280/3-ல் 3 ஏக்கர் 20 -ல் தென்புறம் 2 ஏக்கர் 9 செண்டில் 5 சென்ட் மட்டும்" என விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட விபரப்படி 1ம் வாதிக்கு கிரையம் செய்து கொடுத்த காளிமுத்துக்கு சர்வே எண்.280/3-ல் 3 ஏக்கர் 20 சென்ட் பாத்தியம் உள்ளது என்பதாலும் மேற்படி காளிமுத்துவின் மனைவியான 1ம் பிரதிவாதியின் தாயார் 1 ஏக்கர் 69 சென்ட் நிலத்தை மட்டுமே 1ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் எழுதி கொடுத்துள்ளார் என்ற நிலையில் 1-ம் வாதி கிரையம் பெற்ற சொத்தான 5 சென்ட் நிலமானது மேற்படி வா.சா.ஆ.10, வா.சா.ஆ.11, வா.சா.ஆ.12-ல் குறிப்பிட்ட சொத்திற்குள் தான் உள்ளது என்பதை வாதிகள் அடையாளங்காட்டி (Identify) நிரூபித்திட எந்தவொரு ஆதரவையும் தாக்கல் செய்திடவில்லை. வா.சா.3 ஆக சாட்சியமளித்த 1ம் வாதி வா.சா.ஆ.14, வா.சா.ஆ.15 பட்டா ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார். மேற்படி பட்டாவில் தாவா 1வது லக்க சொத்தான சர்வே எண்.280/3A3C குறிப்பிட்டிருந்தாலும் மேற்படி ஆவணங்களில் குறிப்பிட்ட சொத்து தான் வா.சா.ஆ.1-ல் கண்ட சொத்து என்பதற்கோ, மேற்படி சொத்து வா.சா.ஆ.10, வா.சா.ஆ.11. வா.சா.ஆ.12 பத்திரங்களில் குறிப்பிட்ட சொத்திற்குள் வருகிறது என்பதற்கோ ஆதரவு எதுவும் வாதிகள் தாக்கல் செய்யவில்லை. மேலும் 1ம் வாதிக்கு கிரையம் செய்து கொடுத்த காளிமுத்துக்கு பாத்தியப்பட்ட சொத்தான 3 ஏக்கர் 20 சென்டில் 1 ஏக்கர் 69 சென்டினை மட்டுமே காளிமுத்துவின் மனைவி வா.சா.ஆ.10ன் மூலமாக செட்டில்மெண்ட் செய்து கொடுத்துள்ளார் என்ற வகையில் 1ம் வாதி கிரையம் பெற்ற சொத்து மேற்சொன்ன 3 ஏக்கர் 20 சென்டில் வா.சா.ஆ.10-ல் குறிப்பிட்ட சொத்திற்குள்தான் வருகிறது என்பதை ஒத்துரைத்து (Corelate) உறுதியூட்டக்கூடிய ஆதரவு தாக்கல் செய்திடாத காரணத்தால் தாவா 1வது லக்க சொத்தானது வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் 1ம் வாதிக்கு பாத்தியமான சொத்து என்ற விளம்புகை பரிகாரம் 1ம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் மேலும் 1வது லக்க சொத்தைப் பொறுத்து விளம்புகை பரிகாரம் 1ம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என முடிவு செய்துள்ளதால்

மேற்படி சொத்தைப் பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் 1ம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என எழுவினா 1-ற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

12) <u>எழுவினா 2-ற்கான தீர்வு</u>-

தாவா 2வது லக்க சொத்தானது சர்வே எண்.280/3A3A-ல் 5 சென்ட் உள்ள இடமானது வா.சா.ஆ.2 கிரைய ஆவணம் மூலமாக 2ம் வாதி 22.01.1979-ம் தேதியில் கிரையம் பெற்றதாகவும் வா.சா.ஆ.10, வா.சா.ஆ.11, வா.சா.ஆ.12 ஆவணங்கள் மூலமாக தாவா சொத்துக்கள் 1ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் மூலமாக பாத்தியப்படுத்தி மேற்படி 1-ம் பிரதிவாதி 2, 3 பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்துவிட்டதால் மேற்படி வா.சா.ஆ.10, வா.சா.ஆ.11, வா.சா.ஆ.12 ஆவணங்கள் செல்லத்தக்க ஆவணங்கள் இல்லை என்றும், வா.சா.ஆ.2 ஆவணத்தின்படி தாவா 2வது லக்க சொத்து 2ம் வாதிக்கு பாத்தியம் என விளம்புகை செய்திட கோரிடும் பரிகாரம் குறித்து பரிசீலனை செய்கையில், வா.சா.ஆ.2 ஆவணத்தில்,

"சர்வே எண்.280/3-ல் 3 ஏக்கர் 20 சென்டில் தென்புறம் 2 ஏக்கர் 9 சென்டில் 5 சென்ட் மட்டும்" என விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது. தாவா பிராதில் 2ம் லக்க சொத்தானது "சர்வே எண்.280/3A3A- புஞ்சை 5 சென்ட்" என விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது. தாவா 2வது லக்க சொத்து தான் வா.சா.ஆ.2-ல் குறிப்பிட்ட சொத்து என்ற சங்கதியை ஒத்துரைப்பு (Corelate) செய்து உறுதியூட்டக்கூடிய ஆதரவு எதுவும் வா.சா.ஆ.2ஐ தவிர வாதிகள் தரப்பில் தாக்கல் செய்திடவில்லை. மேலும் வா.சா.ஆ.2-ல் குறிப்பிட்ட சொத்தைத்தான் வா.சா.ஆ.10, வா.சா.ஆ.11, வா.சா.ஆ.12 ஆவணங்கள் மூலமாக உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்ற சங்கதிக்கு ஆதரவாகவும் ஒத்துரைப்பு (Corelate) ஆவணம் வாதிகள் தாக்கல் செய்திடவில்லை. 2ம் வாதிக்கு காளிமுத்து என்பவர் கிரையம் செய்து கொடுத்ததாக சொல்லும் சர்வே எண்.280/3-ல் 5 சென்ட் நிலமானது பூமியில் எங்கு அமைந்துள்ளது என்பதை அடையாளப்படுத்தி காட்டக்கூடிய ஆதரவு எதுவும் வாதிகள் தாக்கல் செய்திடவில்லை. மேலும் 2ம் வாதிக்கு தாவா 2வது லக்க சொத்தை கிரையம் செய்து கொடுத்திட்ட காளிமுத்துக்கு சர்வே எண்.280/3-ல் 3 ஏக்கர் 20 சென்ட் நிலம் பாத்தியம் என்பதாலும் மேற்படி காளிமுத்துவின் மனைவியான 1ம் பிரதிவாதியின் தாயார் 1 ஏக்கர் 69 சென்ட் நிலத்தை மட்டுமே 1ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் எழுதி

கொடுத்துள்ளார் என்ற நிலையில் 2ம் வாதி கிரையம் பெற்ற சொத்தான 5 சென்ட் நிலமானது மேற்படி வா.சா.ஆ.10, வா.சா.ஆ.11, வா.சா.ஆ.12-ல் குறிப்பிட்ட சொத்திற்குள் தான் உள்ளது என்பதை வாதிகள் அடையாளங்காட்டி நிரூபித்திட எந்தவொரு ஆதரவையும் தாக்கல் செய்திடவில்லை. மேற்கண்ட காரணங்களினால் தாவா 2வது லக்க சொத்தைப்பொறுத்து வா.சா.ஆ.2 ஆவணத்தின் மூலமாக 2ம் வாதி கோரிடும் விளம்புகை பரிகாரமும் தொடர்பரிகாரமான நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் 2ம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என 2ம் எழுவினாவிற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

13) <u>எழுவினா - 3-ற்கான தீர்வு-</u>

தாவா 3வது லக்க சொத்தானது சர்வே எண்.280/3A3A-ல் 5 சென்ட் உள்ள இடமானது வா.சா.ஆ.3 கிரைய ஆவண சான்று நகல் மூலமாக 3ம் வாதி 16.01.1979-ம் தேதியில் கிரையம் பெற்றதாகவும் வா.சா.ஆ.10, வா.சா.ஆ.11, வா.சா.ஆ.12 ஆவணங்கள் மூலமாக தாவா சொத்துக்கள் 1ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் மூலமாக பாத்தியப்படுத்தி 1ம் பிரதிவாதி 2, 3 பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்து விட்டதால் வா.சா.ஆ.10, வா.சா.ஆ.11, வா.சா.ஆ.12 ஆவணங்கள் செல்லத்தக்க ஆவணங்கள் இல்லை என்றும் வா.சா.ஆ.3 ஆவணத்தின் படி தாவா 3வது லக்க சொத்து 3ம் வாதிக்கு பாத்தியம் என விளம்புகை செய்திட கோரிடும் பரிகாரம் குறித்து பரிசீலனை செய்கையில்,

வா.சா.ஆ.3-ல் "சர்வே எண்.280/3-ல் 3 ஏக்கர் 20 சென்டில் தென்புறம் 2 ஏக்கர் 9 சென்டில் 5 சென்ட்" என விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது. தாவா பிராதில் 3ம் லக்க சொத்தானது சர்வே எண்.280/3A3A புஞ்சை 5 சென்ட் என விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது. தாவா 3-ம் லக்க சொத்து தான் வா.சா.ஆ.3-ல் குறிப்பிட்ட சொத்து என்ற சங்கதியை ஒத்துரைப்பு (Corelate) செய்து உறுதியூட்டக்கூடிய ஆதரவு எதுவும் வாதிகள் தாக்கல் செய்திடவில்லை. மேலும் வா.சா.ஆ.3-ல் குறிப்பிட்ட சொத்தைத்தான் வா.சா.ஆ.10, வா.சா.ஆ.11, வா.சா.ஆ.12 ஆவணங்கள் மூலமாக உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்ற சங்கதிக்கு ஆதரவாகவும் ஒத்துரைப்பு (Corelate) ஆவணம் வாதிகள் தாக்கல் செய்திடவில்லை. 3ம் வாதிக்கு காளிமுத்து என்பவர் கிரையம் செய்து கொடுத்ததாக சொல்லும் சர்வே எண்.280/3-ல்

5 செனட் நிலமானது பூமியில் எங்கு அமைந்துள்ளது என்பதை அடையாளப்படுத்தி காட்டக்கூடிய ஆதரவு எதுவும் வாதிகள் தாக்கல் செய்திடவில்லை. மேலும் 3-ம் வாதிக்கு தாவா 3வது லக்க சொத்தை கிரையம் செய்து கொடுத்திட்ட காளிமுத்துக்கு சர்வே எண்.280/3-ல் 3 ஏக்கர் 20 செனட் நிலம் பாத்தியம் என்பதாலும் மேற்படி காளிமுத்துவின் மனைவியான 1-ம் பிரதிவாதியின் தாயார் 1 ஏக்கர் 69 செனட் நிலத்தை மட்டுமே 1ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் எழுதி கொடுத்துள்ளார் என்ற நிலையில் 3-ம் வாதி கிரையம் பெற்ற சொத்தான 5 செனட் நிலமானது மேற்படி வா.சா.ஆ.10, வா.சா.ஆ.11, வா.சா.ஆ.12 -ல் குறிப்பிட்ட சொத்திற்குள் தான் உள்ளது என்பதை வாதிகள் அடையாளங்காட்டி நிரூபித்திட எந்தவொரு ஆதரவையும் தாக்கல் செய்திடவில்லை. மேற்கண்ட காரணங்களினால் தாவா 3வது லக்க சொத்தைப்பொறுத்து வா.சா.ஆ.3 ஆவணத்தின் மூலமாக 3-ம்வாதி கோரிடும் விளம்புகை பரிகாரமும் தொடர் பரிகாரமான நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் 3-ம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என 3ம் எழுவினாவிற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

14) <u>எழுவினா - 4-ற்கான தீர்வு-</u>

தாவா 4ம் லக்க சொத்திற்கு 4ம் வாதி பெயரில் உரிமை மூல ஆவணமோ, அனுபவ பாத்திய ஆவணமோ இருந்ததாக காட்டிட எந்த ஆவணமும் தாக்கல் செய்திடவில்லை. வா.சா.ஆ.4 கிரைய ஆவணத்தின் மூலமாக 4ம் வாதியின் தந்தை தாவா 4வது லக்க சொத்தை கிரையம் பெற்றதாகவும் 4ம் வாதியின் தந்தை 2010-ல் இறந்த பிறகு வாரிசு கிரமத்தில் 4-ம் வாதி மேற்படி சொத்தை அடைந்ததாகவும் சொல்வதற்கு ஆதரவாக எந்தவொரு ஆவணமும் வாதிகள் தாக்கல் செய்திடவில்லை. மேலும் 4ம் வாதியின் தந்தைக்கு 4-ம் வாதி வாரிசுதாரர் என்பதற்கு வாரிசு சான்று ஆவணம் எதுவும் 4ம் வாதி தரப்பில் தாக்கல் செய்திடவில்லை. மேலும் வா.சா.ஆ.4 கிரைய ஆவணத்தின் அசல் தாக்கல் செய்திடாமல் உண்மை நகல் மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தாவா 4வது லக்க சொத்தானது சர்வே எண்.280/3A3A-ல் 5 செனட் உள்ள இடமானது வா.சா.ஆ.4 கிரைய ஆவணம் மூலமாக 4ம் வாதியின் தந்தை 16.01.1979-ம்

தேதியில் கிரையம் பெற்றதாகவும் வா.சா.ஆ.10, வா.சா.ஆ.11, வா.சா.ஆ.12 ஆவணங்கள் மூலமாக தாவா சொத்துக்கள் 1ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் மூலமாக பாத்தியப்படுத்தி 1ம் பிரதிவாதி 2, 3 பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்து விட்டதால் வா.சா.ஆ.10, வா.சா.ஆ.11, வா.சா.ஆ.12 ஆவணங்கள் செல்லத்தக்க ஆவணங்கள் இல்லை என்றும் வா.சா.ஆ.4 ஆவணத்தின் படி தாவா 4வது லக்க சொத்து 4ம் வாதிக்கு பாத்தியம் என விளம்புகை செய்திட கோரிடும் பரிகாரம் குறித்து பரிசீலனை செய்கையில்,

வா.சா.ஆ.4-ல் "சர்வே எண்.280/3-ல் 3 ஏக்கர் 20 சென்டில் தென்புறம் 2 ஏக்கர் 9 சென்டில் 5 சென்ட்" என விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது. தாவா பிராதில் 4ம் லக்க சொத்தானது சர்வே எண்.280/3A3A புஞ்சை 5 சென்ட் என விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது. தாவா 4-ம் லக்க சொத்து தான் வா.சா.ஆ.4-ல் குறிப்பிட்ட சொத்து என்ற சங்கதியை ஒத்துரைப்பு (Corelate) செய்து உறுதியூட்டக்கூடிய ஆதரவு எதுவும் வாதிகள் தாக்கல் செய்திடவில்லை. மேலும் வா.சா.ஆ.4-ல் குறிப்பிட்ட சொத்தைத்தான் வா.சா.ஆ.10, வா.சா.ஆ.11, வா.சா.ஆ.12 ஆவணங்கள் மூலமாக உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்ற சங்கதிக்கு ஆதரவாகவும் ஒத்துரைப்பு (Corelate) ஆவணம் வாதிகள் தாக்கல் செய்திடவில்லை. 4ம் வாதியின் தந்தைக்கு காளிமுத்து என்பவர் கிரையம் செய்து கொடுத்ததாக சொல்லும் சர்வே எண்.280/3-ல் 5 சென்ட் நிலமானது பூமியில் எங்கு அமைந்துள்ளது என்பதை அடையாளப்படுத்தி காட்டக்கூடிய ஆதரவு எதுவும் வாதிகள் தாக்கல் செய்திடவில்லை. மேலும் 4-ம் வாதியின் தந்தைக்கு தாவா 4வது லக்க சொத்தை கிரையம் செய்து கொடுத்திட்ட காளிமுத்துக்கு சர்வே எண்.280/3-ல் 3 ஏக்கர் 20 சென்ட் நிலம் பாத்தியம் என்பதாலும் மேற்படி காளிமுத்துவின் மனைவியான 1-ம் பிரதிவாதியின் தாயார் 1 ஏக்கர் 69 சென்ட் நிலத்தை மட்டுமே 1ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் எழுதி கொடுத்துள்ளார் என்ற நிலையில் 4-ம் வாதியின் தந்தை கிரையம் பெற்ற சொத்தான 5 சென்ட் நிலமானது மேற்படி வா.சா.ஆ.10, வா.சா.ஆ.11, வா.சா.ஆ.12 -ல் குறிப்பிட்ட சொத்திற்குள் தான் உள்ளது என்பதை வாதிகள் அடையாளங்காட்டி நிரூபித்திட எந்தவொரு ஆதரவையும் தாக்கல் செய்திடவில்லை. மேற்கண்ட காரணங்களினால் தாவா 4வது லக்க சொத்தைப்பொறுத்து வா.சா.ஆ.4

ஆவணத்தின் மூலமாக 4-ம்வாதி கோரிடும் விளம்புகை பரிகாரமும் தொடர் பரிகாரமான நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் 4-ம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என 4ம் எழுவினாவிற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

15) <u>எழுவினா - 5-ற்கான தீர்வு-</u>

தாவா 5ம் லக்க சொத்திற்கு 5ம் வாதி பெயரில் உரிமை மூல ஆவணமோ, அனுபவ பாத்திய ஆவணமோ இருந்ததாக காட்டிட எந்த ஆவணமும் தாக்கல் செய்திடவில்லை. வா.சா.ஆ.5 கிரைய ஆவணத்தின் மூலமாக 5ம் வாதியின் தந்தை தாவா 5வது லக்க சொத்தை கிரையம் பெற்றதாகவும் 5ம் வாதியின் தந்தை 2010-ல் இறந்த பிறகு வாரிசு கிரமத்தில் 5-ம் வாதி மேற்படி சொத்தை அடைந்ததாகவும் சொல்வதற்கு ஆதரவாக எந்தவொரு ஆவணமும் வாதிகள் தாக்கல் செய்திடவில்லை. மேலும் 5ம் வாதியின் தந்தைக்கு 5-ம் வாதி வாரிசுதாரர் என்பதற்கு வாரிசு சான்று ஆவணம் எதுவும் 5ம் வாதி தரப்பில் தாக்கல் செய்திடவில்லை. மேலும் வா.சா.ஆ.5 கிரைய ஆவணத்தின் அசல் தாக்கல் செய்திடாமல் சான்று நகல் மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தாவா 5வது லக்க சொத்தானது சர்வே எண்.280/3A3A-ல் 5 சென்ட் உள்ள இடமானது வா.சா.ஆ.5 கிரைய ஆவணம் மூலமாக 5ம் வாதியின் தந்தை 16.01.1979-ம் தேதியில் கிரையம் பெற்றதாகவும் வா.சா.ஆ.10, வா.சா.ஆ.11, வா.சா.ஆ.12 ஆவணங்கள் மூலமாக தாவா சொத்துக்கள் 1ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் மூலமாக பாத்தியப்படுத்தி 1ம் பிரதிவாதி 2, 3 பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்து விட்டதால் வா.சா.ஆ.10, வா.சா.ஆ.11, வா.சா.ஆ.12 ஆவணங்கள் செல்லத்தக்க ஆவணங்கள் இல்லை என்றும் வா.சா.ஆ.5 ஆவணத்தின் படி தாவா 5வது லக்க சொத்து 5ம் வாதிக்கு பாத்தியம் என விளம்புகை செய்திட கோரிடும் பரிகாரம் குறித்து பரிசீலனை செய்கையில்,

வா.சா.ஆ.5-ல் "சர்வே எண்.280/3-ல் 3 ஏக்கர் 20 சென்டில் தென்புறம் 2 ஏக்கர் 9 சென்டில் 5 சென்ட்" என விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது. தாவா பிராதில் 5ம் லக்க சொத்தானது சர்வே எண்.280/3A3A புஞ்சை 5 சென்ட் என விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது. தாவா 5-ம் லக்க சொத்து தான் வா.சா.ஆ.5-ல் குறிப்பிட்ட சொத்து என்ற சங்கதியை ஒத்துரைப்பு (Corelate) செய்து உறுதியூட்டக்கூடிய

ஆதரவு எதுவும் வாதிகள் தாக்கல் செய்திடவில்லை. மேலும் வா.சா.ஆ.5-ல் குறிப்பிட்ட சொத்தைத்தான் வா.சா.ஆ.10, வா.சா.ஆ.11, வா.சா.ஆ.12 ஆவணங்கள் மூலமாக உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்ற சங்கதிக்கு ஆதரவாகவும் ஒத்துரைப்பு (Corelate) ஆவணம் வாதிகள் தாக்கல் செய்திடவில்லை. 5ம் வாதியின் தந்தைக்கு காளிமுத்து என்பவர் கிரையம் செய்து கொடுத்ததாக சொல்லும் சர்வே எண்.280/3-ல் 5 சென்ட் நிலமானது பூமியில் எங்கு அமைந்துள்ளது என்பதை அடையாளப்படுத்தி காட்டக்கூடிய ஆதரவு எதுவும் வாதிகள் தாக்கல் செய்திடவில்லை. மேலும் 5-ம் வாதியின் தந்தைக்கு தாவா 5வது லக்க சொத்தை கிரையம் செய்து கொடுத்திட்ட காளிமுத்துக்கு சர்வே எண்.280/3-ல் 3 ஏக்கர் 20 சென்ட் நிலம் பாத்தியம் என்பதாலும் மேற்படி காளிமுத்துவின் மனைவியான 1-ம் பிரதிவாதியின் தாயார் 1 ஏக்கர் 69 சென்ட் நிலத்தை மட்டுமே 1ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் எழுதி கொடுத்துள்ளார் என்ற நிலையில் 5-ம் வாதியின் தந்தை கிரையம் பெற்ற சொத்தான 5 சென்ட் நிலமானது மேற்படி வா.சா.ஆ.10, வா.சா.ஆ.11, வா.சா.ஆ.12-ல் குறிப்பிட்ட சொத்திற்குள் தான் உள்ளது என்பதை வாதிகள் அடையாளங்காட்டி நிரூபித்திட எந்தவொரு ஆதரவையும் தாக்கல் செய்திடவில்லை. மேற்கண்ட காரணங்களினால் தாவா 5வது லக்க சொத்தைப்பொறுத்து வா.சா.ஆ.5 ஆவணத்தின் மூலமாக 5-ம் வாதி கோரிடும் விளம்புகை பரிகாரமும் தொடர் பரிகாரமான நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் 5-ம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என 5ம் எழுவினாவிற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

16) <u>எழுவினா - 6-ற்கான தீர்வு-</u>

தாவா 6ம் லக்க சொத்திற்கு 6ம் வாதி பெயரில் உரிமை மூல ஆவணமோ, அனுபவ பாத்திய ஆவணமோ இருந்ததாக காட்டிட எந்த ஆவணமும் தாக்கல் செய்திடவில்லை. வா.சா.ஆ.6 கிரைய ஆவணத்தின் மூலமாக 6ம் வாதியின் தந்தை தாவா 6வது லக்க சொத்தை கிரையம் பெற்றதாகவும் 6ம் வாதியின் தந்தை 2010-ல் இறந்த பிறகு வாரிசு கிரமத்தில் 6-ம் வாதி மேற்படி சொத்தை அடைந்ததாகவும் சொல்வதற்கு ஆதரவாக எந்தவொரு ஆவணமும் வாதிகள் தாக்கல் செய்திடவில்லை. மேலும் 6ம் வாதியின் தந்தைக்கு 6-ம் வாதி வாரிசுதாரர் என்பதற்கு வாரிசு சான்று ஆவணம் எதுவும் 6ம் வாதி தரப்பில் தாக்கல் செய்திடவில்லை. மேலும்

வா.சா.ஆ.6 கிரைய ஆவணத்தின் அசல் தாக்கல் செய்திடாமல் சான்று நகல் மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தாவா 6வது லக்க சொத்தானது சர்வே எண்.280/3A3A-ல் 5 செண்ட் உள்ள இடமானது வா.சா.ஆ.6 கிரைய ஆவணம் மூலமாக 6ம் வாதியின் தந்தை 29.01.1979-ம் தேதியில் கிரையம் பெற்றதாகவும் வா.சா.ஆ.10, வா.சா.ஆ.11, வா.சா.ஆ.12 ஆவணங்கள் மூலமாக தாவா சொத்துக்கள் 1ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் மூலமாக பாத்தியப்படுத்தி 1ம் பிரதிவாதி 2, 3 பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்து விட்டதால் வா.சா.ஆ.10, வா.சா.ஆ.11, வா.சா.ஆ.12 ஆவணங்கள் செல்லத்தக்க ஆவணங்கள் இல்லை என்றும் வா.சா.ஆ.6 ஆவணத்தின் படி தாவா 6வது லக்க சொத்து 6ம் வாதிக்கு பாத்தியம் என விளம்புகை செய்திட கோரிடும் பரிகாரம் குறித்து பரிசீலனை செய்கையில்,

வா.சா.ஆ.6-ல் "சர்வே எண்.280/3-ல் 3 ஏக்கர் 20 சென்டில் தென்புறம் 2 ஏக்கர் 9 சென்டில் 5 செண்ட்" என விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது. தாவா பிராதில் 6ம் லக்க சொத்தானது சர்வே எண்.280/3A3A புஞ்சை 5 செண்ட் என விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது. தாவா 6-ம் லக்க சொத்து தான் வா.சா.ஆ.6-ல் குறிப்பிட்ட சொத்து என்ற சங்கதியை ஒத்துரைப்பு (Corelate) செய்து உறுதியூட்டக்கூடிய ஆதரவு எதுவும் வாதிகள் தாக்கல் செய்திடவில்லை. மேலும் வா.சா.ஆ.6-ல் குறிப்பிட்ட சொத்தைத்தான் வா.சா.ஆ.10, வா.சா.ஆ.11, வா.சா.ஆ.12 ஆவணங்கள் மூலமாக உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்ற சங்கதிக்கு ஆதரவாகவும் ஒத்துரைப்பு (Corelate) ஆவணம் வாதிகள் தாக்கல் செய்திடவில்லை. 6ம் வாதியின் தந்தைக்கு காளிமுத்து என்பவர் கிரையம் செய்து கொடுத்ததாக சொல்லும் சர்வே எண்.280/3-ல் 5 செண்ட் நிலமானது பூமியில் எங்கு அமைந்துள்ளது என்பதை அடையாளப்படுத்தி காட்டக்கூடிய ஆதரவு எதுவும் வாதிகள் தாக்கல் செய்திடவில்லை. மேலும் 6-ம் வாதியின் தந்தைக்கு தாவா 6வது லக்க சொத்தை கிரையம் செய்து கொடுத்திட்ட காளிமுத்துக்கு சர்வே எண்.280/3-ல் 3 ஏக்கர் 20 செண்ட் நிலம் பாத்தியம் என்பதாலும் மேற்படி காளிமுத்துவின் மனைவியான 1-ம் பிரதிவாதியின் தாயார் 1 ஏக்கர் 69 செண்ட் நிலத்தை மட்டுமே 1ம் பிரதிவாதிக்கு

செட்டில்மெண்ட் எழுதி கொடுத்துள்ளார் என்ற நிலையில் 6-ம் வாதியின் தந்தை கிரையம் பெற்ற சொத்தான 5 சென்ட் நிலமானது மேற்படி வா.சா.ஆ.10, வா.சா.ஆ.11, வா.சா.ஆ.12 -ல் குறிப்பிட்ட சொத்திற்குள் தான் உள்ளது என்பதை வாதிகள் அடையாளங்காட்டி நிரூபித்திட எந்தவொரு ஆதரவையும் தாக்கல் செய்திடவில்லை. மேற்கண்ட காரணங்களினால் தாவா 6வது லக்க சொத்தைப்பொறுத்து வா.சா.ஆ.6 ஆவணத்தின் மூலமாக 6-ம்வாதி கோரிடும் விளம்புகை பரிகாரமும் தொடர் பரிகாரமான நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் 6-ம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என 6ம் எழுவினாவிற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

17) **<u>எழுவினா - 7-ற்கான தீர்வு-</u>**

தாவா 7-ம் லக்க சொத்திற்கு 7-ம் வாதி பெயரில் உரிமைமூல ஆவணம் எதுவும் உள்ளதாக தாக்கல் செய்யப்படவில்லை. வா.சா.ஆ.14 ஆனது தாவா 7வது லக்க சொத்தைப்பொறுத்து பட்டா ஆவணம் 7ம் வாதி பெயரில் ஏற்பட்டுள்ளது என்பதற்காக வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா 7வது லக்க சொத்தானது 7-ம் வாதியின் தாயார் பழனியம்மாள் 17.01.1979-ம் தேதிய வா.சா.ஆ.7 கிரைய ஆவணத்தின் மூலம் கிரையம் பெற்று 05.02.2016-ம் தேதிய செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் 7-ம் வாதிக்கு பாத்தியப்படுத்தியதாக வாதிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்ட சங்கதியில் 05.02.2016-ம் தேதிய செட்டில்மெண்ட் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. வா.சா.ஆ.7ன் அசலும் தாக்கல் செய்திடாமல் சான்று நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தாவா 7வது லக்க சொத்தானது சர்வே எண்.280/3A3A-ல் 5 சென்ட் உள்ள இடமானது வா.சா.ஆ.7 கிரைய ஆவணம் மூலமாக 7ம் வாதியின் தாயார் 16.01.1979-ம் தேதியில் கிரையம் பெற்றதாகவும் வா.சா.ஆ.10, வா.சா.ஆ.11, வா.சா.ஆ.12 ஆவணங்கள் மூலமாக தாவா சொத்துக்கள் 1ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் மூலமாக பாத்தியப்படுத்தி 1ம் பிரதிவாதி 2, 3 பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்து விட்டதால் வா.சா.ஆ.10, வா.சா.ஆ.11, வா.சா.ஆ.12 ஆவணங்கள் செல்லத்தக்க ஆவணங்கள் இல்லை என்றும் வா.சா.ஆ.7 ஆவணத்தின் படி தாவா 7வது லக்க சொத்து 7ம் வாதிக்கு பாத்தியம் என விளம்புகை செய்திட கோரிடும் பரிகாரம் குறித்து பரிசீலனை செய்கையில்,

வா.சா.ஆ.7-ல் "சர்வே எண்.280/3-ல் 3 ஏக்கர் 20 சென்டில் தென்புறம் 2 ஏக்கர் 9 சென்டில் 5 சென்ட்" என விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது. தாவா பிராதில் 7ம் லக்க சொத்தானது சர்வே எண்.280/3A3A புஞ்சை 5 சென்ட் என விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது. தாவா 7-ம் லக்க சொத்து தான் வா.சா.ஆ.7-ல் குறிப்பிட்ட சொத்து என்ற சங்கதியை ஒத்துரைப்பு (Corelate) செய்து உறுதியூட்டக்கூடிய ஆதரவு எதுவும் வாதிகள் தாக்கல் செய்திடவில்லை. மேலும் வா.சா.ஆ.7-ல் குறிப்பிட்ட சொத்தைத்தான் வா.சா.ஆ.10, வா.சா.ஆ.11, வா.சா.ஆ.12 ஆவணங்கள் மூலமாக உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்ற சங்கதிக்கு ஆதரவாகவும் ஒத்துரைப்பு (Corelate) ஆவணம் வாதிகள் தாக்கல் செய்திடவில்லை. 7ம் வாதியின் தாயாருக்கு காளிமுத்து என்பவர் கிரையம் செய்து கொடுத்ததாக சொல்லும் சர்வே எண்.280/3-ல் 5 சென்ட் நிலமானது பூமியில் எங்கு அமைந்துள்ளது என்பதை அடையாளப்படுத்தி காட்டக்கூடிய ஆதரவு எதுவும் வாதிகள் தாக்கல் செய்திடவில்லை. மேலும் 7-ம் வாதியின் தாயாருக்கு தாவா 7வது லக்க சொத்தை கிரையம் செய்து கொடுத்திட்ட காளிமுத்துக்கு சர்வே எண்.280/3-ல் 3 ஏக்கர் 20 சென்ட் நிலம் பாத்தியம் என்பதாலும் மேற்படி காளிமுத்துவின் மனைவியான 1-ம் பிரதிவாதியின் தாயார் 1 ஏக்கர் 69 சென்ட் நிலத்தை மட்டுமே 1ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் எழுதி கொடுத்துள்ளார் என்ற நிலையில் 7-ம் வாதியின் தாயார் கிரையம் பெற்ற சொத்தான 5 சென்ட் நிலமானது மேற்படி வா.சா.ஆ.10, வா.சா.ஆ.11, வா.சா.ஆ.12 -ல் குறிப்பிட்ட சொத்திற்குள் தான் உள்ளது என்பதை வாதிகள் அடையாளங்காட்டி நிரூபித்திட எந்தவொரு ஆதரவையும் தாக்கல் செய்திடவில்லை. மேற்கண்ட காரணங்களினால் தாவா 7வது லக்க சொத்தைப்பொறுத்து வா.சா.ஆ.7 ஆவணத்தின் மூலமாக 7-ம்வாதி கோரிடும் விளம்புகை பரிகாரமும் தொடர் பரிகாரமான நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் 7-ம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என 7ம் எழுவினாவிற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

18) <u>எழுவினா - 8-ற்கான தீர்வு-</u>

தாவா 8வது லக்க சொத்தானது சர்வே எண்.280/3A3A-ல் 5 சென்ட் உள்ள இடமானது வா.சா.ஆ.8 கிரைய ஆவணம் மூலமாக 8ம் வாதி 16.01.1979-ம் தேதியில் கிரையம் பெற்றதாகவும் வா.சா.ஆ.10, வா.சா.ஆ.11, வா.சா.ஆ.12 ஆவணங்கள் மூலமாக

தாவா சொத்துக்கள் 1ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் மூலமாக பாத்தியப்படுத்தி 1ம் பிரதிவாதி 2, 3 பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்து விட்டதால் வா.சா.ஆ.10, வா.சா.ஆ.11, வா.சா.ஆ.12 ஆவணங்கள் செல்லத்தக்க ஆவணங்கள் இல்லை என்றும் வா.சா.ஆ.8 ஆவணத்தின் படி தாவா 8வது லக்க சொத்து 8ம் வாதிக்கு பாத்தியம் என விளம்புகை செய்திட கோரிடும் பரிகாரம் குறித்து பரிசீலனை செய்கையில்,

வா.சா.ஆ.8-ல் "சர்வே எண்.280/3-ல் 3 ஏக்கர் 20 சென்டில் தென்புறம் 2 ஏக்கர் 9 சென்டில் 5 சென்ட்" என விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது. தாவா பிராதில் 8ம் லக்க சொத்தானது சர்வே எண்.280/3A3A புஞ்சை 5 சென்ட் என விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது. தாவா 8-ம் லக்க சொத்து தான் வா.சா.ஆ.8-ல் குறிப்பிட்ட சொத்து என்ற சங்கதியை ஒத்துரைப்பு (Corelate) செய்து உறுதியூட்டக்கூடிய ஆதரவு எதுவும் வாதிகள் தாக்கல் செய்திடவில்லை. மேலும் வா.சா.ஆ.8-ல் குறிப்பிட்ட சொத்தைத்தான் வா.சா.ஆ.10, வா.சா.ஆ.11, வா.சா.ஆ.12 ஆவணங்கள் மூலமாக உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்ற சங்கதிக்கு ஆதரவாகவும் ஒத்துரைப்பு (Corelate) ஆவணம் வாதிகள் தாக்கல் செய்திடவில்லை. 8ம் வாதிக்கு காளிமுத்து என்பவர் கிரையம் செய்து கொடுத்ததாக சொல்லும் சர்வே எண்.280/3-ல் 5 சென்ட் நிலமானது பூமியில் எங்கு அமைந்துள்ளது என்பதை அடையாளப்படுத்தி காட்டக்கூடிய ஆதரவு எதுவும் வாதிகள் தாக்கல் செய்திடவில்லை. மேலும் 8-ம் வாதிக்கு தாவா 8வது லக்க சொத்தை கிரையம் செய்து கொடுத்திட்ட காளிமுத்துக்கு சர்வே எண்.280/3-ல் 3 ஏக்கர் 20 சென்ட் நிலம் பாத்தியம் என்பதாலும் மேற்படி காளிமுத்துவின் மனைவியான 1-ம் பிரதிவாதியின் தாயார் 1 ஏக்கர் 69 சென்ட் நிலத்தை மட்டுமே 1ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் எழுதி கொடுத்துள்ளார் என்ற நிலையில் 8-ம் வாதி கிரையம் பெற்ற சொத்தான 5 சென்ட் நிலமானது மேற்படி வா.சா.ஆ.10, வா.சா.ஆ.11, வா.சா.ஆ.12 -ல் குறிப்பிட்ட சொத்திற்குள் தான் உள்ளது என்பதை வாதிகள் அடையாளங்காட்டி நிரூபித்திட எந்தவொரு ஆதரவையும் தாக்கல் செய்திடவில்லை. மேற்கண்ட காரணங்களினால் தாவா 8வது லக்க சொத்தைப்பொறுத்து வா.சா.ஆ.8 ஆவணத்தின் மூலமாக 8-ம்வாதி கோரிடும் விளம்புகை பரிகாரமும் தொடர் பரிகாரமான நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும்

8-ம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என 8ம் எழுவினாவிற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**19) <u>எழுவினாக்கள் - 9 முதல் 11--ற்கான தீர்வு-</u>**

வா.சா.ஆ.10, வா.சா.ஆ.11, வா.சா.ஆ.12 ஆவணங்களில் குறிப்பிட்ட சொத்துக்கள் தான் தாவா 1 முதல் 8 லக்க சொத்துக்கள் என்ற சங்கதியை வாதிகள் உறுதியூட்டி நிரூபித்திடவில்லை என்பதால் வா.சா.ஆ.10, வா.சா.ஆ.11, வா.சா.ஆ.12 ஆவணங்கள் செல்லத்தக்க ஆவணங்கள் அல்ல என்ற விளம்புகை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என எழுவினா 9, எழுவினா 10 மற்றும் எழுவினா 11-ற்கு தீர்வு காணப்படுகிறது. வாதிகள் பிரதிவாதிகள் தரப்பு சாட்சிய சான்றாவணங்களிலிருந்து வாதிகள் கோரிய பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் வழக்கின் தன்மையை கருதி செலவுத் தொகையும், இதர பரிகாரமும் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என எழுவினா 12-ற்கும் தீர்வு காணப்படுகிறது.

**முடிவாக**,

1) வாதிகளின் வழக்கு தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

2) செலவுத் தொகை இல்லை.

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப் பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு 2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 12-ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

PANDY R
Digitally signed by PANDY R
Date: 2026.03.12 16:58:11 +0530

சார்பு நீதிபதி
சிவகங்கை

**<u>வாதிகள் தரப்பு சாட்சிகள்-</u>**

வா.சா.1 – கணேசன் (4ம் வாதி)

வா.சா.2 – நாகு (5-ம் வாதி)

வா.சா.3 – முத்துராமலிங்கம் (1ம் வாதி)

வா.சா.4 – நாகராஜன்

**<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u> :**

வா.சா.ஆ.1 - 23.01.1979 - 1ம் வாதி பெயரிலான கிரையப்பத்திரம் - அசல்

வா.சா.ஆ.2 - 22.01.1979 - 2ம் வாதி பெயரிலான கிரையப்பத்திரம் - அசல்

வா.சா.ஆ.3 - 16.01.1979 - 3ம் வாதி பெயரிலான கிரையப்பத்திரம் - சான்று நகல்

வா.சா.ஆ.4 - 16.01.1979 - 4ம் வாதி தகப்பனார் பெயரிலான கிரையப்பத்திரம் - உண்மை நகல்

வா.சா.ஆ.5 - 16.01.1979 - 5ம் வாதி தகப்பனார் பெயரிலான கிரையப்பத்திரம் - சான்று நகல்

வா.சா.ஆ.6 - 29.01.1979 - 6ம் வாதி தகப்பனார் பெயரிலான கிரையப்பத்திரம் - சான்று நகல்

வா.சா.ஆ.7 - 17.01.1979- 7ம் வாதி தாயார் பெயரிலான கிரையப்பத்திரம் -சான்று நகல்

வா.சா.ஆ.8 - 16.01.1979- 8ம் வாதி பெயரிலான கிரையப்பத்திரம் -சான்று நகல்

வா.சா.ஆ.9 - 18.07.2017 - பட்டா - கணினி நகல்

வா.சா.ஆ.10 - 08.12.2010 - செட்டில்மெண்ட் பத்திரம் -சான்று நகல்

வா.சா.ஆ.11 - 31.05.2011- சீர்திருத்தப்பத்திரம் -சான்று நகல்

வா.சா.ஆ.12 - 20.09.2017 - கிரையப்பத்திரம் - சான்று நகல்

வா.சா.ஆ.13 - 23.07.2019 - வில்லங்கச் சான்று -அசல்

வா.சா.ஆ.14 - 15.06.2006 - பட்டா மாறுதல் உத்தரவு - அசல்

வா.சா.ஆ.15 - 19.11.2024 - 1-ம் வாதி பெயரிலான பட்டா - கணினி நகல்

வா.சா.ஆ.16 - 19.11.2024 - 7-ம் வாதி பெயரிலான பட்டா - கணினி நகல்

(வா.சா.ஆ.3 முதல் வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் தவறுதலாக PW 1 சாட்சியத்தில் அசல் என தட்டச்சு செய்யப்பட்டுள்ளது.)

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்-</u>**

பி.வா.சா.1 - சுப்பிரமணியன் த/பெ.பிச்சை

பி.வா.சா.2 - மணிகண்டன்

பி.வா.சா.3 - பாண்டி (2ம் பிரதிவாதி)

பி.வா.சா.4 - சுப்பிரமணியன் த/பெ.ஒய்யப்பன்

**<u>பிரதிவாதிகள்தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.1- | -- | பி.வா.சா.1-ன் ஆதார் அட்டை நகல் |
| பி.வா.சா.ஆ.2- | 08.12.2010 - | 1-ம் பிரதிவாதியின் தாயாரான திருவாயி கடந்த 08.12.2010-ல் தாவா சொத்தைப் பொறுத்து 1-ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் - சான்று நகல் |
| பி.வா.சா.ஆ.3- | 20.09.2017 - | 1-ம் பிரதிவாதி பெயரிலான கணினி பட்டா - கணினி நகல் |
| பி.வா.சா.ஆ.4- | 20.09.2017 - | கிரைய ஆவணம் - சான்று நகல் |

**<u>சாட்சிய சான்றாவணங்கள்</u>-**

சா.சா.ஆ.1 - பி.வா.சா.2-ன் ஆதார் அட்டை நகல்

சா.சா.ஆ.2 - பி.வா.சா.4-ன் ஆதார் அட்டை நகல்

PANDY R Digitally signed by PANDY R Date: 2026.03.12 16:58:01 +0530

சார்பு நீதிபதி

சிவகங்கை

Subordinate Court,
Sivagangai
O.S.No.540/2019
**Draft/Fair Judgment**
12.03.2026.